2015 ஆகஸ்ட் 27]

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

ஆரம்ப சுகாதார நிலையம்

***43538 திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மஞ்சாரஅள்ளி ஊராட்சி, செல்லமுடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"என்ன கொடுப்பார் எவை கொடுப்பார்
என்றிவர்கள் எண்ணும் முன்னே
பொன்னும் கொடுப்பார் பொருள் கொடுப்பார்
போதாது போதாதென்றால் (மேசையைத் தட்டும் ஒலி)
இன்னும் கொடுப்பார் இவையும் குறைவென்றால்
அள்ளி அள்ளிக் கொடுப்பார்."

அவர்தான் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுத் துறைக்குத் திட்டங்களை அள்ளி, அள்ளிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், மஞ்சாரஅள்ளி ஊராட்சி, செல்லமுடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால்

ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது நாளொன்றுக்கு 150 புறநோயாளிகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

154—

துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***49587—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், அரசூர் துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், அரசூர் 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட 2 மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. அந்தப் பகுதியின் உச்ச மின்பளுத் தேவை 9.2 எம்.வி.ஏ. ஆகும். அரசூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், பெருகி வரும் மின் பளுவைக் கருத்திற்கொண்டு, அங்கு இயங்கி வரும் 2X5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிகளுடன், 2X8 எம்.வி.ஏ. திறன்கொண்ட 2 மின்மாற்றிகளைக் கூடுதலாக